# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் – 2010

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

### 1.1 அபிப்பிராயம்

-------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட உச்ச தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளைப் பேணியிருந்தது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------------

(அ) பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான ரஹங்கலவில் அமைந்துள்ள விவசாய விஞ்ஞான பீடத்திற்குரிய காணியையும் கட்டிடத் தொகுதியையும் பாதுகாப்பு அமைச்சினால் பொறுப்பேற்றுக் கொண்டு அதற்குப் பதிலாக பலாங்கொடை நன்பெரியல் தோட்டத்திற்குரிய 50 ஏக்கர் அளவிலான காணி பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 757,772 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் அவ்வாண்டின் போதே மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் அந் நிலையான சொத்துக்கள் 2010 ஆம் ஆண்டின் போதே மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(இ) கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டின் போது முழு ஆண்டிற்குமான பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு செய்யப்படுவதே பல்கலைக்கழகத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கையான போதிலும் மேற்குறித்த (ஆ) இன் பிரகாரம் 2009 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிராமையால் அவ்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பெறுமானத்தேய்விற்கான தொகை ரூபா 151,554 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் 2010 ஆம் ஆண்டின் ஆரம்ப திரண்ட பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடும் அப் பெறுமதியினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,455,713 பெறுமதியான பட்டதாரிகளின் மேலங்கிகள் ஆதனம், பொறி உபகரணங்களின் கீழும் நடைமுறைச் சொத்துக்களில் இறுதி இருப்பின் கீழும் இரு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) பிடித்து வைக்கப்படும் நிதிய மீதியில் உள்ளடக்கப்பட்ட NCAS Research Grant நிதியத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 250,000 தொகையான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகையில் மீளச் சீராக்கப்பட்டிருந்தது.

(ஊ) பிடித்து வைக்கப்படும் நிதிய மீதியின் அதிகரிப்பு ரூபா 3,852,942 ஆன போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுகையில் இது ரூபா 3,919,815 ஆகக் கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.2.2. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழக ஊழியர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,126,770 கூட்டுத்தொகையான கடன்தொகை அவர்கள் சேவையிலிருந்து

இராஜினாமா செய்தமை, இறப்பெய்தியமை, சேவையிலிருந்து நீக்கம் போன்ற காரணங்களால் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடமுடியாதிருந்தது.

(ஆ) உபசரிப்பு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 131,167 தொகை நானாவித பெறவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகை 2011 மே 02 ஆம் திகதி வரை உயர் கல்வி நிறுவகங்களினால் மீளளிக்கப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிற்காக தொடர்ந்தும் வாரிசு உடமையாக வைத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையான சொத்துக்களுக்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஆறு மாத காலத்திற்கும் ஒவ்வொரு வாகனத்தினதும் நுகரப்பட்ட எரிபொருள் எவ்வளவு என்பதனை ஆய்வு செய்து அதன் பிரகாரம் செயற்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திடம் உள்ள வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 போதியளவு அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிணைப்பொறுப்பு அடிப்படையில் ரூபா 3,778,223 தொகையை செலுத்தத் தவறியதன் காரணமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்து சேவையை விட்டுச் சென்றதாகக் கருதிய விரிவுரையாளர் ஒருவரை ஆராய்ந்து பார்க்காமல் பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 18:12:1 ஆம் பிரிவிற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இல்லாமல் சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு 2007 ஜனவரி 04 ஆம் திகதி முதல் சிரேஷ்ட விரிவுரையாளராக ஆட்சேர்க்கப்பட்டிருந்ததது. 2009 மே 30 இல் நடைபெற்ற 142 ஆவது கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது அதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 மே 02 ஆம் திகதி வரையிலும் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளவில்லை. 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,768,635 அவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. அவர் தொடர்ந்தும் சேவையில் உள்ளார்.

(ஆ) சுற்றுலாத் துறை தொடர்பாக அரச மற்றும் தனியார் பிரிவுகளின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் செயலமர்வின் பாதீட்டின் பிரகாரம் 60 பங்கேற்பாளர்களிடம் இருந்து ரூபா 900,000 வருமானத் தொகையும் ரூபா 675,500 செலவினத் தொகையும் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் பங்கேற்பு 10 பேராக மாத்திரமே இருந்ததுடன் அவர்களிடமிருந்து ரூபா 89,500 மாத்திரம் கிடைத்திருந்தது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 99(1) (ஈ) பிரிவின் பிரகாரம், எவ்வாறான மூலத்திலிருந்தும் அல்லது கையேற்கப்பட்ட வேறு அனைத்து தொகையும் பல்கலைக்கழக நிதியத்திற்கு உள்ளடக்கப்படும். எவ்வாறெனினும் இதற்கு முரணாக மேற்குறித்த செயற்திட்டத்திற்காகச் சேகரிக்கப்பட்ட ரூபா 61,000 தொகை செயற்திட்டத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட விரிவுரையாளரால் செலவிடப்பட்டிருந்தது.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 60,787,955 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையான ரூபா 78,382,603 உடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகள் ரூபா 17,594,648 ஆல் அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. எவ்வாறெனினும் அரசாங்க மானியத்தை அகற்றிய போது 2009 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 454,179,053 ஆகக் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 480,706,405 ஆனமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,527,352 தொகையான வீழ்ச்சியைக் காணக்கூடியதாக உள்ளது. ஆளணி ஊதியம் 7.31% இனாலும் பராமரிப்புச் செலவினம் 25.55% இனாலும், உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் 16.80% ஆலும் வெளிவாரி செயலமர்வுச் செலவினங்கள் 54.46% இனாலும் அதிகரித்திருந்தமை இதற்கு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 செயலாற்றுகை

(அ) மீளாய்வாண்டில் 2786 மாணவர்களின் கல்வி நடவடிக்கைளுக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 412,744,390 ஆக இருந்ததுடன் அதன்படி மாணவர் ஒருவருக்கான கிரயம் ரூபா 148,149 ஆக இருந்தது. முன்னைய ஆண்டில் 2378 மாணவர்களுக்கான கற்கைச் செலவினம் ரூபா 393,930,505 ஆக இருந்ததுடன், அதன்படி மாணவர் ஒருவருக்கான செலவினம் ரூபா 166,656 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மாணவர் ஒருவருக்கான செலவினம் ரூபா 17,507 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2009/2010 கல்வியாண்டில் மருத்துவ விஞ்ஞான பீடத்தை ஆரம்பிப்பதற்கு 2006 - 2010 கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 2010 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அதற்கான காணியை மட்டும் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 ஒப்பந்த நிர்வாகம்

----------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 9,812,890 உடன்படிக்கைப் பெறுதியான விவசாய விஞ்ஞான பீட கட்டடத்தின் III ஆம் கட்ட நிர்மாண வேலைக்குரிய அதன் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,256,981 ஆயத்தப்படுத்தல் முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தாரரால் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டமையால் 2009 ஜனவரி 19 ஆம் திகதி முதல் ஒப்பந்த உடன்படிக்கை இரத்துச்செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 1,179,637 ஆன தீர்க்கப்படாத ஆயத்தப்படுத்தல் முற்பணத்தை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

(ஆ) முகாமைத்துவ பீடம் கட்டம் II, சமூக விஞ்ஞான பீடம் கட்டம் I மற்றும் விவசாய விஞ்ஞான பீடங்கள் ஆகிய பீடங்களின் கட்டிட நிர்மாண வேலைக்குரிய நிர்மாண வேலைகளைப் பூர்த்திசெய்து அக் கட்டிடங்கள் பல்கலைக்கழகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்ட போதிலும் இறுதிப் பட்டியல்கள் தீர்க்கப்பட்டிராமையால் அக்கட்டிடங்கள் மூலதனமாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது மேலும் நடைமுறைவேலைக் கணக்கில் ரூபா 316,995,732 ஆகக் கணக்கிடப்பட்டிருந்ததுடன் அக் கட்டிட நிர்மாணிப்பிற்காக வழங்கப்பட்ட ரூபா 2,386,971 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 தாமதமான செயற்திட்டங்கள்

-----------------------------------------------

தகவல்தொழிநுட்ப கட்டிடமொன்றையும் மாணவர் விடுதிகள் இரண்டையும் நிர்வாகக் கட்டிடத்தையும் நிர்மாணிப்பதற்காக முறையே 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், போதியளவு நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்றிராமை மற்றும் கேள்விகளை வழங்குவதிலுள்ள சிக்கல்கள் காரணமாக அத்தியாவசியமான நிர்மாணிப்புகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிர்மாணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முகாமைத்துவ செயற்திறனின்மை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பராமரிப்புப் பிரிவின் உப களஞ்சியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 வகையான பொருட்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின் அட்டைமீதியும் பௌதீக மீதியும் சமப்பட்டிராததுடன், பின்அட்டைகள் நாளாந்தம் பேணப்பட்டிராமையும் அங்கீகாரம் இன்றி பொருட்கள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களும் கண்டறியப்பட்டன. இவ்வாறே வழங்கல் பத்திரங்களில் ஒரு பொருள் விநியோகிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பின் அட்டைகளில் உள்ளடக்கப்பட்டிராத 38 சந்தர்ப்பங்களும் பின் அட்டைகளில் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் வழங்கல் பத்திரங்கள் அற்ற 52 சந்தர்ப்பங்களும் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டன.

(ஆ) உடற் கல்வி திணைக்களத்திற்கு பட்மின்டன் மற்றும் டெனிஸ் ரகட் கட் செய்வதற்கு கட் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2009 யூலை 29 ஆம் திகதி விலை கோரப்பட்டிருந்ததுடன் 2009 திசெம்பர் 10 ஆம் திகதி கூடப்பட்ட தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரையின் அடிப்படையிலும் 2009 திசெம்பர் 15 ஆம் திகதிய சிறு கொள்வனவுக் குழு அங்கீகாரத்தின் அடிப்படையிலும் கையால் தொழிற்படும் கட் இயந்திரம் ஒன்று ரூபா 386,400 செலுத்தப்பட்டு கொள்வனவு

செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் மாதிரிகளைக் குறிப்பிடுகையில் கையால் இயக்கும் இயந்திரம் அல்லது மின்னியக்க இயந்திரம் என்பது குறிப்பிடப்பட்டிராததுடன் அவசியமான நூல் கொள்வனவு செய்யப்பட்டிராமையால் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,000 செலவிடப்பட்டு 04 ரகட்கள் வெளி நிறுவகம் ஒன்றிடம் இருந்து கட் செய்யப்பட்டிருந்தது. மேலும் கொள்வனவு செய்யப்பட்ட கட் இயந்திரத்தினை உற்பத்தி செய்த நாடு தாய்வானாக பொருட்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கட் இயந்திரத்தில் எந்த இடத்தில் தயாரிக்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிட்டிருக்கவில்லை.

(இ) கல்வி மற்றும் கல்வி சாரா பதவியணியினரின் சொந்த வாகனங்களைத் நிறுத்தி வைப்பதற்காக இரண்டு வாகனத் தரிப்பிடங்களைத் தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 484,174 செலுத்தப்பட்டு தேவையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2011 மார்ச் 24 வரையும் உறுதியான திட்டத்தை அங்கீகரிக்காது ஒரு வாகனத் தரிப்பிடம் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இங்கு வாகனம் நிறுத்தி வைக்கப்படுவதில்லை என்பது கண்டறியப்பட்டதுடன் இதற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,560 தொகையான அமோனா சீட்களும் நிர்மாணிக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஐஆர்கியூயூஈ செயற்திட்டத்தின் கீழ் ரூபா 3,996,250 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட சபரகமுவ பல்கலைக்கழக அச்சகத்தின் செயற்பாட்டை ஆய்வு செய்கையில், ஊழியர்களைப் பயிற்றுவிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 568,500 தொகையான மதிப்பீட்டில் ரூபா 284,250 தொகை உரிய நிறுவகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அங்கு பயிற்சிக் காலம் 15 நாட்களான போதிலும் எவ்வளவு காலத்திற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன என்பது குறித்து வெளிப்படுத்தப்படாததுடன் 2010 திசெம்பர் 10 ஆம் திகதி ஊவ வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட கட்டளைகளைப் பூர்த்தி செய்வதற்கு 2011 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இவ் அச்சகம் ஸ்தாபிக்கப்பட்டதை அடுத்து 03 சந்தர்ப்பங்களின் போது பல்கலைக்கழகத்தின் அச்சீட்டு நடவடிக்கைகள் வெளிநிறுவகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டதற்காக ரூபா 219,426 செலுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறே அச்சகத்திற்கு அவசியமான புத்தகக் கோப்புத் தொகுதி 2011 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையும் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2011 பெப்ரவரி 11 அளவில் அச்சு இயந்திரத்தில் ஏற்பட்ட குறைபாடு 2011 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையும் வழமை நிலைக்குக் கொண்டுவரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பல்கலைக்கழகப் பதவியணியில் 4 வேலைக் கண்காணிப்பாளர்கள் நிரந்தர சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் கேட்போர் கூட திரைப்பட வெளியீட்டு நடவடிக்கைகள், உத்தியோகபூர்வ விடுதிகளின் கதவு, யன்னல் பழுதுபார்த்தல், பரீட்சை மண்டபங்களை தயார்படுத்தல் மற்றும் வீதி மின்விளக்குகளைத் தயாரித்தல் போன்ற வேலைகளைக் கண்காணிப்பதற்காக களஞ்சியப் பொறுப்பாளர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக அவருக்கு மேலதிக நேரப்பணமாக ரூபா 29,061 தொகை 03 மாத காலமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2.5 பயன்படுத்தப்படாத குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

வாடகைக்குப் பெறப்பட்ட 3 விடுதிகளுக்காக 01 அங்குல 03 நீர் பம்பிகள் 2005 மார்ச் 31 இல் கோரப்பட்டு ரூபா 51,000 செலுத்திக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அத் தேவைப்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படாத 02 நீர் பம்பிகள் 2011 சனவரி 25 ஆந் திகதி வரையும் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ளப்படாது விடுதி மேற்பார்வையாளர் விடுதியில் வைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி நீர் பம்பிகள் எப் பிரிவிற்கு வழங்கப்பட்டது என்பது குறித்து கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

------------------------------------------------

பினவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய களஞ்சிய இருப்பு மெய்மையாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 15,594 தொகையான இருப்புப் குறைவும் ரூபா 29,715 தொகையான இருப்பு மிகையும் தொடர்பாக கணக்காய்வு தினம் வரை நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மூன்று ஊழியர்களின் சம்பளங்களில் இருந்து அறவிடப்பட்டு ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய 8% பங்களிப்புப் பணம் ரூபா 18,405 தொகையும் 2005 செப்தெம்பர் மாதம் முதல் 2006 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்காக 11 ஊழியர்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தையும் செலுத்தியிராத காரணத்தினால் ரூபா 106,474 தொகையும் ஆக ரூபா 124,879 கூட்டுமொத்த தொகையினை மிகையறவீடாகச் செலுத்துவதற்கு பல்கலைக்கழக நிதியத்திற்கு நேர்ந்திருந்தது.

### 2.2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிங்ஹராஜ விடுதியில் செயற்பாடற்றுக் காணப்பட்ட 02 மின்னியக்க மோட்டார்கள் திருத்தப்படுவதற்காக ரூபா 38,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 02 நீர் மோட்டர்கள் கொண்டு சென்றமைக்கும் கொண்டு வரப்பட்டமையினை விடுதி துணை மேற்பார்வையாளர் தெரிந்திராததுடன் வாயில் அனுமதிப்பத்திரம், உரிய நாளாந்த ஓட்டக் குறிப்பு மற்றும் இதனுடனான வேலைப் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமூக விஞ்ஞான மற்றும் மொழிக் கல்விப் பிரிவில் ஜேர்மன் மொழி தொடர்பான பயிற்றுவிப்பு விரிவுரையாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்படுகையில் தேவையான ஆகக் குறைந்த தகமையேனும் கொண்டிராதவர் சேர்த்துக்கொள்ளப்பட்டு 2005 யூலை 01 ஆம் திகதி முதல் 2010 திசெம்பர் 31 வரை சம்பளம் மற்றும் படிப்பணமாக ரூபா 2,729,695 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மேற்குறித்த பதவிக்காக அவர் தகமை பெற்றுள்ளார் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதாக உப வேந்தர் அறிவித்துள்ளார்.

(இ) பல்கலைக்கழக எழுதுவினைஞர் மற்றும் தொழிநுட்பவியலாளர் சேவைச் சங்கத்தின் 52 ஆவது பொதுக் கூட்டம் 2010 இல் கலந்து கொள்ளச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் தனியார் பிரிவின் 03 பஸ் வண்டிகள் பெறப்படுகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 789 ஆம் இலக்க 2001 செப்தெம்பர் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட விதந்துரைப்புகளுக்கு முரணாக செயற்பட்டு ரூபா 181,275 தொகை செலுத்தப்பட்டு சேவை பெறப்பட்டிருந்தது.

### 2.2.8 நிச்சயமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2008 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த புவியியல் விஞ்ஞான பீடத்தின் இணையதள கேபிள் முறைமையில் ஏற்பட்டிருந்த ரூபா 347,300 தொகையான நட்டத்திற்குப் பொறுப்பு வாய்ந்தவர்கள் நிச்சயிக்கப்பட்டிராததுடன் 2010 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் அத்தொகை இலங்கை மின்சார சபையில் இருந்து பெற வேண்டிய பணமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.9 பாதீட்டுக்கட்டுப்பாடு

மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், செலவினம் என்பவற்றை உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடும் போது 11% முதல் 286% வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான பலவீனங்கள் காலத்துக்குக் காலம் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளின் பராமரிப்பு

(இ) சொத்துக்களின் பயன்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஊ) மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு